REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 15உ சனி (1—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 16உ ஞாயிறு (2—10—55) [இதழ் 93

15 இடங்களுக்கு 3,000 பட்டதாரிகள்!

திருவனந்தபுரம், செப். 29—

கணக்குப் பரிசோதனை அலுவலகத்தில் 15 குமாஸ்தா உத்தியோகங்களுக்கு சுமார் 3,000 பட்டதாரிகள்—இவர்களில் 500 பேர், முதல், இரண்டாம் வகுப்புகளில் தேறியவர்கள்—மனுச் செய்திருக்கின்றனராம்!

இவர்களில் 500 பேர் எழுத்து மூலம் பரிட்சைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இவர்களில் 200 பேர் மட்டுமே நேர்முகப் பரிட்சைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

'அரசியல் சட்ட விதி பற்றி புனராலோசனை வேண்டும்'

'மத்திய சர்க்காரை வற்புறுத்த இந்தி வழங்காத மாநிலங்களின் கூட்டு முன்னணி தேவை'

சட்ட சபையில் மந்திரி சுப்பிரமணியம்

சென்னை, செப், 30—

"இந்திய அரசியல் சட்டத்தில் அலுவல் மொழி பற்றிய 17-ம் பிரிவு, இறுதி நேரத்தில் அரசியல் நிர்ணய சபையில் ஏற்பட்ட ஒரு சமரச முடிவு என்பதினால், மீண்டும் அது குறித்துத் தீர்க்கமாகப் பரிசீலனை செய்ய வேண்டுவது அவசியமாகும்;

"இந்தி மொழிக் குழுவினரின் கேள்விப் பட்டியலுக்கான விடைகளைத் தயாரிப்பதற்கு, சட்ட சபையில் உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்று கூட்டி, அவர்களின் யோசனையைக் கேட்க விரும்புகிறேன்;

"மத்திய சர்க்காரின் அலுவல் மொழி பற்றிய சிக்கலில், இந்தி மொழி வழங்காத இதர பகுதியினர் கூட்டாகச் சேர்ந்து, 'முன்னணி' ஒன்று அமைத்து, பொது முடிவு மேற்கொண்டால், அந்த முடிவினை இந்திய சர்க்கார் அலட்சியப்படுத்திவிட முடியாது; அதற்கு அவர்கள் மதிப்பளிக்க வேண்டுவது அவசியமாகும்,"

—என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம், சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

அ. நி. சபையில் ஆத்திரக் காட்சிகள்!

ஒருறுப்பு திட்டம் நிறைவேறிவிட்டது

ஆவேசமும், ஆத்திரமும் கொண்ட நிலையில், ஒருறுப்புத் திட்ட மசோதா, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் நிறைவேறிவிட்டதாம்.

பல உறுப்பினர்கள், மசோதாவுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பினராம்.

மசோதாவுக்குச் சாதகமாக 43 வாக்குகளும், பாதகமாக 13 வாக்குகளும் கிடைத்தனவாம்.

மந்திரி சுப்பிரமணியத்தின் ஏளனம்

மாத்தூர் போராட்டத்திற்குக் கூலிக்கு ஆள் பிடிக்கப்படுகிறதாம்!

சென்னை சட்ட சபையில் கண்டனம்

சென்னை, செப். 30—

"ஸ்ரீபெரும்புதூர் வட்டம் மாத்தூர் கிராமத்தில் நடைபெறும் விவசாயிகள் 'சத்தியாக்கிரகம்' என்று கூறப்படும் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக, கூலிக்கு ஆள் பிடிக்கப்படுகின்றது,"

என்று, மந்திரி சுப்பிரமணியம் சட்ட சபையில் ஏளனமாகப் பேசியிருக்கிறார்.

"ரிக்ஷா இழுப்போருக்கு தினம் ரூ 5 தருவதாகவும், சிறையிலிருக்கும் காலத்தில் குடும்பத்திற்குப் படி தருவதாகவும் கூறி, போராட்டத்தில் ஈடுபட்டிருப்போர் ஆள் சேர்க்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"மாத்தூரில் நடைபெறும் விவசாயிகள் போராட்டம் பற்றி விவாதிக்க வேண்டும்," என்று உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்த ஒத்திவைப்புப்பிரரேபணை, 'திட்டமாக இல்லை' என்று கூறப்பட்டு நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

நிதி மந்திரி சுப்பிரமணியம், 'விவசாயிகள் விஷயத்தில் வேறெவரைக் காட்டிலும் சர்க்காருக்கு அதிகமான அக்கரை இருக்கிறது,' என்று வீராப்பு மட்டும் பேசியிருக்கிறார்.

"விவசாயிகள்—மிராசுதார் சிக்கலைத் தீர்க்க சர்க்கார் சமாதான முறையில் எல்லாவகையாலும் முயற்சிக்கும்," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

தோழர் தெய்வசிகாமணி அவர்கள், மந்திரி சுப்பிரமணியம், போராட்டம் குறித்து ஏளனமாகப் பேசியதைக் கண்டித்திருக்கிறார்.

ஒரு முடிவு ஏற்படுவதில் குறுக்கிடுகிற மூன்றாவது நபர் சர்க்கார் தான் என்றும், சர்க்கார், மிராசுதாரர்களுக்கு ஆதரவாக இருக்கின்றனர் என்றும், வேறொரு உறுப்பினர், சர்க்காருக்கு இடித்துரைத்திருக்கிறார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கையில் விலங்கு மாட்டி இழுத்துச் சென்றது குறித்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டபோது, மந்திரி, "அதிகாரிகள் சட்டப்படி நடந்துகொண்டிருப்பர்—சட்டத்தை மீறிப் புறம்பாக நடந்துகொண்டிருப்பார்களேயானால் அது குறித்து விசாரிக்கப்படும்" என்றும் தெரிவித்திருக்கிறார்.

டால்மியா சிறைப்பட்ட எதிரொலி!

'மந்திரி கிருஷ்ணமாச்சாரி டால்மியாநகர் செல்கை கைது செய்யப்பட்டதுடன் தொடர்புடையதா?'

மக்கள் சபையில் கேள்வியும்-பதிலும்

புதுடில்லி செப். 30—

டால்மியா நகருக்கு வர்த்தக, தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி சென்றதற்கும், இராமகிருஷ்ண டால்மியா கைது செய்யப்பட்டதற்கும் தொடர்பு ஏதேனும் உண்டா என்பது, இன்று, மக்கள் சபை விவாதத்திற்குரியதாகியிருக்கிறது.

இது குறித்து பீகாரைச் சேர்ந்த நான்கு காங்கிரஸ் உறுப்பினர்கள் கேள்வி கேட்டிருக்கின்றனர்.

"நிதி மந்திரி சமீபத்தில் 'டால்மியா நகர்' செல்லப் போவதும் உண்மையா?" என்றும் கேட்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் நேரு சொன்னார்:—

"டால்மியா கைது செய்யப்பட்டதற்கும் — மந்திரி கிருஷ்ணமாச்சாரி டால்மியா நகர் சென்றதற்கும் தொடர்பே இல்லை; டால்மியா கைது செய்யப்படுவார் என்பது எனக்கும், நிதி மந்திரிக்கும் தவிர வேறு யாருக்கும் தெரிந்திருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை;

"பீகார் சர்க்காரின் அழைப்பின் பேரிலேயே மந்திரி கிருஷ்ணமாச்சாரி, டால்மியா நகரில் உள்ள தொழில் நிறுவனங்களைப் பார்வையிடுவதற்காக வழக்கம்போலச் சென்றிருக்கிறார்."

"பீகார் சர்க்கார் அழைத்தார்கள் என்றால், எந்த மந்திரி அல்லது அதிகாரி கடிதம் எழுதினார்—அல்லது, டெலிபோன் செய்தார் என்று கூறமுடியுமா? மந்திரி பார்வையிட்ட வேறு தொழில் நிறுவனங்கள் எவை என அறிவிக்க முடியுமா? மந்திரி பார்வையிடுகிறார் என்பது மக்கள் சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டதா?"

என்றெல்லாம் சரமாரியான கேள்விகளை, உறுப்பினர்கள் தொடுத்திருக்கின்றனர்; ஆனால் பிரதமர் நேருவோ, சற்று ஆத்திரப்பட்டவராய், "இந்தக் கேள்விகள் ஏன் என்பவை எனக்குப் புரியவில்லை; இவற்றிற்கு ஏதோ உள் நோக்கம் இருப்பதுபோல் தெரிகின்றது; அப்படியானால் அதனை நான் எதிர்க்கிறேன்," என்று கூறி, திருப்பவும், துவக்கத்தில் கூறிய 'தொடர்பில்லை' என்ற பதிலையே தந்திருக்கிறார்.

பல உறுப்பினர்களும் இது குறித்துப் பலப்பல கேள்விகள் கேட்டிருக்கின்றனர்.

கம்யூனிஸ்டுகள் தயாராம்!

சர்க்காருக்கு எதிராகத் தாங்கள் நடத்திவரும் ஆயுதம் தாங்கிய போரை நிறுத்துவது பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக மலேயா கம்யூனிஸ்டு கட்சி அறிவித்துள்ளதாம்.

கல்லக்குடி அறப்போரில் உயிர் நீத்தோர் குடும்பத்திற்கு சர்க்கார் நிதி உதவி!

தூத்துக்குடியில் பலியானோர் நிலை என்ன?

சென்னை, செப். 30—

'டால்மியாபுரம்' என்ற பெயரை 'கல்லக்குடி'யாக மாற்ற வேண்டும்—என்று தி. மு. கழகம் நடத்திய போராட்ட சம்பவங்களையொட்டி இன்று சென்னை சட்ட சபையில் கேள்விகள் எழுந்தன.

"போராட்டத்தின்போது, துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிர் துறந்த தோழர்கள் கேசவன், நடராசன் ஆகியவர்களின்பெற்றோருக்கு சர்க்கார் பண உதவி செய்கிறது" என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

கே: "'டால்மியாபுரம்' பெயர் மாற்றப் போராட்டத்தின் விளைவாக நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் ஆகியோரின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு ஏதேனும் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா?"

ப: "போராட்டத்தில் உயிர் துறந்த தோழர் கேசவனின் அன்னைக்கு, மாதமொன்றுக்கு ரூ. 20 வீதம் அவரது ஆயுள் காலம் வரையில் தரப்படும்; கடந்த இரண்டு ஆண்டுகளாக (15-7-55) முதல் அத்தொகை கொடுக்கப்பட்டு வருகிறது; அதே போன்று, தோழர் நடராசனின் தந்தைக்கு மொத்தமாக ரூ. 500 தரப்பட்டுள்ளது."

கே: "டால்மியாபுரம் என்ற பெயரை, அப்பகுதி மக்கள் விரும்பவில்லை; அதை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றனர்; மக்கள் கருத்துக்கு சர்க்கார் மதிப்பு கொடுக்குமா?"

ப: "டால்மியாபுரம் என்பது ஒரு இரயில்வே நிலையத்தின் பெயர்; அதை மாகாண சர்க்கார் மாற்றமுடியாது; ஊரின் பெயராக இருந்தால், அதை, இம்மாநில சர்க்கார் மாற்றிவிடலாம்."

கே:- "டால்மியாபுரத்தின் பெயரை 'கல்லக்குடி' என்று

(4-ம் பக்கம் பார்க்க.)

மாநில புனரமைப்புக் குழு அறிக்கை

மாநில சர்க்கார்களுக்கு எச்சரிக்கை!

புதுடில்லி, செப். 30—

இந்தியாவெங்கணும் பெரும் பரபரப்பையும், பேராவலையும் தூண்டியுள்ள மாநிலபுனரமைப்புக் குழுவின் அறிக்கை இன்று பகல் இந்திய சர்க்காரிடம் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அறிக்கை சுமார் 150 பக்கங்கள் கொண்டது என்றும்; செய்யப்பட்டுள்ள சிபாரிசுகளின் சாராம்சம் அடங்கிய அநுபந்தம் ஒன்று அறிக்கையில் இணைக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது.

அறிக்கை பகல் 11-30 மணிக்கு, குழுவின் செயலாளரால் இந்திய சர்க்கார் உள்நாட்டிலாகா செயலாளரிடம் தாக்கலாயிற்று.

பகல் 2 மணிக்கு, உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் வசம் அறிக்கை ஒப்படைக்கப்பட்டது.

காலையில், குழுவின் தலைவரான சையத் பாசல் அலியின் இல்லத்தில், குழுவின் இதர உறுப்பினர்களான சர்தார் கே. எம். பணிக்கர், பண்டித எச். என். குன்ஸ்ரு ஆகியோர் அறிக்கையில் கையொப்பமிட்டிருக்கின்றனர்.

பிரதமர் பண்டித நேருவுக்கு அறிக்கையின் நகல் மாலை தரப்பட்டதும் உடன், மந்திரி சபைக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

அறிக்கை, வரும் அக்டோபர் 10-ந் தேதியன்று வெளியிடப்படும் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

நாளையதினம் மக்கள் சபையில் இது பற்றி பிரதமர் நேரு, 'அறிக்கை வெளியிடுவதில் தாமதம் ஏன்?' என்பதை விளக்குவாராம்.

மாநில அரசாங்கங்கள் எல்லாம், நிர்வாகம், சட்டம் அமைதி,ஒழுங்கு இவற்றைக் காப்பாற்றுவதற்காக 'உஷாரா'க இருக்கவேண்டுமென்றும், நிலைமைகளைக் கூர்ந்து கவனித்தவண்ணம் இருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கின்றனராம்.

அறிக்கை பற்றிய ஆருடங்களால் நாட்டில் குழப்பம் ஏற்படாமல் தடுப்பதற்காகவேனும், சீக்கிரமே அதனை வெளியிட்டுவிட இந்தியப் பேரரசு விரும்புகிறதாம்!

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—10—'55 சனி

தொடரும் துயரம்

இலங்கை வாழ் திராவிடரின் இன்னல் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிறது; கொடுமைக் குன்றேறிக் கொக்கரிக்கிறார், கொத்தலாவலே!

'நாடற்றவர்களே! நீங்கள் நாடற்றவர்கள் மட்டுமல்ல — நாதியற்றவர்களுங்கூட! பார்த்திரா, உங்கள் இந்தியப் பிரதமரின் கையாலாகாத்தனத்தை!' என்று கூறிக் கேலி செய்வது போல் இருக்கின்றன—கொத்தலாவலே சர்க்காரின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும்!

ஒப்பந்தங்கள் பலனற்றவையாகிவிட்ட நிலையில், இலங்கை வாழ் திராவிடர், கண்ணீரும் கம்பலையுமாய் தேம்பியழுதபடி, தேற்றுவாரற்றுத் தவிக்கின்றனர்!

கொத்தலாவலேயோ, 'ஓடுங்கள்—உங்கள் பிறந்த நாட்டுக்கு,' என்று துரத்துகிறார்; அவர்கள் ஓடிவர வேண்டிய நாட்டினை ஆளும் நேரு பண்டிதரோ, 'என்னால் ஆகவில்லை; முடியுமானால், நீங்களாகவே பார்த்துக் கொள்ளுங்கள்; இங்கு மட்டும் வர நினைக்காதீர்! நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்!'—என்று கூறிவிட்டு, தனது பொறுப்பு முடிந்துவிட்டதாக நினைத்துக் கொள்ளுகிறார்.

எத்தனை சீக்கிரம் இலங்கை வாழ் திராவிடரை இலங்கையிலிருந்து வெளியேற்றிவிட முடியுமோ அத்தனை சீக்கிரம் வெளியேற்றிவிட கொத்தலாவலே சர்க்கார் தீவிரமான நடவடிக்கைகளை நாள்தோறும் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் வாழும் திராவிடரை நம்பி, அவர்கள் அனுப்பும் ஒரு சில வெண்பொற்காசுகளில் தங்கள் வாழ்வை ஓட்டிக்கொண்டிருக்கும் 'இந்தியா'வில் வாழும் அவர்களது உறவினர்கள், இனி, இலங்கை சென்று, அவர்களைப் பார்த்து வர முடியாது; அப்படிச் சென்று வர இலங்கை சர்க்கார் அனுமதி தர முடியாது என உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இந்த உத்திரவின் விளைவாக, இலங்கையில் வாழும் திராவிடர்களில் 'நாடற்றவர்கள்' என்று பட்டம் சூட்டப்பட்டிருப்போர், தங்கள் சுற்றத்தாரையும், தங்களை நம்பியிருப்பவரையும் காணவேண்டின், தாங்கள்தான் 'இந்தியா'விற்கு வரவேண்டியிருக்கும். இப்படி அவர்கள் இந்தியா சென்று வருவதினால் அவர்கள் இலங்கையில் நிரந்தரக் குடி உரிமை பெறுவதற்கு அருகதையற்றவர்கள் என்று கூறிவிடலாம் என்று, கொத்தலாவலே சர்க்கார் கருதுகிறதாம். எப்படியிருக்கிறது பாருங்கள், அவர்களின் 'தந்திரம்?'

இப்படி, இலங்கைத் திராவிடருக்கு அடுக்கடுக்காக விளைவிக்கப்படும் கொடுமைகளைக் காண, அவர்களின் சோதரர்களான தாயகத் திராவிடர் மனம் புழுங்குகின்றனர்; வேதனையால் வாடுகின்றனர்!

திராவிடரை இலங்கைக்கு அழைத்துச் சென்றவர்கள், வெள்ளையர்: அந்த வெள்ளையர்களே, இலங்கையில் அவர்களுக்குப் 'பாதுகாப்பு' தேடித் தந்திருக்க வேண்டும்; அந்த நியாயமான செயலை வெள்ளையர் செய்யாது சென்றுவிட்டனர்.

'தென்னகத்துத் திராவிடருக்கும் நாங்கள்தான் ஆட்சியாளர்,' என்று கூறிக் கொள்ளும் டெல்லி ஆட்சியாளர், அந்தக்காலத்திலேயே, வெள்ளையர் இலங்கைக்குக் கூட்டிச் சென்ற திராவிடரின் எதிர்காலம் உறுதிப்படும்படியான வழிவகைகளை வகுத்துவிட்டு அவர்களை வெளியேறுமாறு வற்புறுத்தியிருக்க வேண்டும்.

தென்கோடி தனது ஆதிக்கத்திற்கு உட்பட்டுவிட்டதற்காகவே அங்கு வாழும் மக்களுக்கு—திராவிடருக்கு அநீதிகள் பல இழைத்துவரும் வட இந்திய ஏகாதிபத்தியவாதிகளுக்கு, 'ஏக இந்திய' அமைப்பிலிருந்து பிரிந்து போய்விட்ட இலங்கையில் வாழும் திராவிடரைப் பற்றி எப்படி அக்கரை பிறக்க முடியும்?

'அவர்கள் வேறு; நாம் வேறு; அவர்கள் திராவிடர்—நாம் இந்தோ-ஆரியர்! அவர்கள் நமது அடிமைகள்—நாம் அவர்களை ஆள்பவர்கள்,' என்ற எண்ணங்கொண்டுள்ள வட இந்திய ஏகாதிபத்தியவாதிகள், இலங்கை திராவிடரின் நலனில் அக்கரை காட்டவில்லை என்பது, நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லைதான்; ஏனெனில், அவர்களது ஏகாதிபத்தியப் போக்கை நாம் தெளிவாக உணர்ந்துள்ளோம்.

"இலங்கையில் வாழும் 'இந்தியர்' பிரச்சினைக்கு என்னால் இனி ஏதும் ஆகாது; அவர்களே பார்த்துக்கொள்ளட்டும்," என்று கூறும் பண்டிதர், "இந்தியா, 'காமன் வெல்த்' கூட்டமைப்பில் இருப்பது நமக்கு நல்லதுதான்," என்று, தொடர்ந்து கூறிவருகிறார்; அந்தக் கூட்டமைப்பில் இலங்கையும் இடம் பெற்றிருக்கிறது; ஆண்டுதோறும் 'காமன்வெல்த்' நாடுகளின் பிரதமர்கள் மாநாடு நடைபெறுகிறது; தவறாமல் பண்டிதரும் சென்று வருகிறார்; இலங்கைப் பிரதமரும் வருகிறார்; அந்தக் 'காமன்வெல்த்' பிரதமர்கள் மாநாட்டில், ஏன், பண்டிதர், 'இலங்கை இந்தியர்' சிக்கலுக்குப் பரிகாரம் தேடித் தரக்கூடாது?

"இரு 'காமன் வெல்த்' நாடுகளிடையே, சுமார் 10 இலட்சம் மக்களின் வாழ்வுக்கே சீர்குலைவு தேடும் சிக்கல் வளர்ந்திருக்கிறது; அந்தச் சிக்கலைக் கூட நியாயமாகத் தீர்த்துத் தர முடியாத கூட்டமைப்பில், 'இந்தியா' இருப்பானேன்?" என்று தென்னாட்டு முற்போக்குவாதிகள் சிலர் எண்ண முற்பட்டிருக்கின்றனர். இந்த எண்ணம் குறித்து பண்டிதர் என்ன கூறுவாரோ நமக்குத் தெரியாது.

இலங்கையில் மட்டுமின்றி, தென்னாட்டில் வாழும் திராவிடரின் நல்வாழ்வு வட இந்திய ஆதிக்கத்தால் பாழாகிறது என்பதும், திராவிடர் விடுதலையோடு கூடிய நிரந்தரமான நல்வாழ்வு பெறுவதற்கு, 'திராவிட நாடு, திராவிடருக்காக வேண்டும்' என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மைகள் என்பதைத்தான், இலங்கைவாழ் திராவிடரின் வளர்ந்துவரும் துயரும், அவற்றைக் களைவதற்கு முடியாத இந்திய சர்க்காரின் 'கையாலாகாத்தன்மை'யும் நாட்டவருக்குச் சொல்லுகின்றன!

ஆந்திராவில் தெலுங்கு ஆட்சி மொழி

சட்டசபையின் ஒருமனதான தீர்மானம்

கர்னூல், செப். 29—

"ஆந்திர மாநிலத்தின் நிர்வாகம் முழுவதும் தெலுங்கு மொழியிலேயே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நடைபெறச் செய்ய வேண்டும்,"

என்று, தோழர் வாவிலாலா கோபாலகிருஷ்ணன் கொண்டு வந்த தீர்மானம், தோழர் ஏ. காளேசுவரராவின் திருத்தத்துடன் ஒருமனதாக — பெருத்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே ஆந்திர சட்டசபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஐந்தாண்டுக் காலத்திற்குள் தெலுங்கை ஆட்சி மொழியாக்குவதற்கு சர்க்கார் ஆவன செய்யும் என்று உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

தீண்டாமை ஒழிப்பு

மதபோதகர்களின் சேவைகள் படமாக்கப்படுமாம்!

கேஸ்கர் அறிவிப்பு

புதுடில்லி, செப். 29—

டாக்டர் கேஸ்கர் மக்கள் சபையில் பேசுகையில், தீண்டாமை ஒழிப்பு சம்மந்தமாக ஒரு திரைப்படம் தயாரிப்பது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

நாட்டின் சரிதத்தில் இடம் பெற்றுள்ள மதபோதகர்கள், சீர்திருத்தவாதிகள் ஆகியோர் தீண்டாமை ஒழிப்புக்காக மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அந்தப் படத்தில் சித்தரிப்பார்களாம்!

ஆந்திராவில் ஒரு இரும்புத் தொழிற்சாலை?

சட்டசபையில் காளா வெங்கட்ராவ் தகவல்

கர்னூல், செப். 29—

"கிருஷ்ணா மாவட்டத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலையை நிறுவும் திட்டம் ஒன்றை ஆந்திர சர்க்கார் பரிசிலித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது,"

என்று ஆந்திர சட்டசபையில் திட்ட மந்திரி காளா வெங்கட்ராவ் தெரிவித்திருக்கிறார்.

இந்திய பூகர்ப்ப இலாகாவைச் சேர்ந்த டாக்டர் எம். எஸ். கிருஷ்ணா என்ற நிபுணரிடம், இந்தத் திட்டம் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றும், அவரது கருத்து தெரிந்த பின்பே இது பற்றி இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"கிருஷ்ணா மாவட்டத்தில் சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் இரும்புக் கனி காணப்படுவதாக செய்தி வந்திருக்கிறது. ஆனால் கிடைக்கக் கூடிய இரும்புக் கனியின் தரம் பற்றி கருத்துவேறுபாடு இருக்கிறது.

"இலாபகரமாக நடைபெற வேண்டுமானால், இரும்புத்தொழிற்சாலை துவங்க சுமார் 40 இலட்சம் டன் இரும்புக் கனியாவது தேவைப்படும்;

"இந்த வட்டாரத்தில் போதுமான இரும்புக் கனி கிடைக்கும் என்று டாக்டர் கிருஷ்ணா கருத்தறிவிப்பாரானால், கிருஷ்ணா மாவட்டத்தில் ஒரு இரும்பு உருக்கு உலை ஒன்றை சர்க்கார் நிறுவும்," என்றும் மந்திரி விளக்கந்தந்திருக்கிறார்.

"கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள ஜக்கையாபேட்டை எனுமிடத்தில் கிடைக்கும் இரும்புக் கனி, செக்கோஸ்லாவேகியாவிற்கும், ஜப்பானுக்கும் ஏற்றுமதியாகின்றது; கடந்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் சுமார் 6 இலட்சம் டன் இரும்புக் கனி ஆந்திராவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன; ஏற்றுமதியான இரும்புக்கு டன் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் சர்க்காருக்கு 'உரிமை'ப் பணமாக, 6 இலட்சம் ரூபாய் கிடைத்தது" என்றும் காளா தெரிவித்திருக்கிறார்.

'சம்யுக்த மராட்டியம்'

மராட்டியரின் நியாயமான கோரிக்கை

சங்கர் ராவ் தேவ் உறுதி

பூனா, செப். 28—

'சம்யுக்த மராட்டியம்' அமையும்வரை, மராட்டியர்கள் ஒற்றுமையுடனும், தன்னடக்கத்துடனும், கண்ணியங் குன்றாமலும் இருக்கவேண்டும்,"

என்று, 'சம்யுக்த மராட்டிய பரிஷத்' தலைவரான சங்கர்ராவ் தேவ் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள 'ஆரூடங்கள்' மராத்திய மக்களைக் கவலையில் ஆழ்த்தியிருக்கின்றன; என்றாலும், அந்த ஆரூடங்களின் உண்மைத் தன்மை, குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்புதான் நிர்ணயிக்கப்பட முடியும்; எனவே, மக்கள் அந்த 'ஆரூடங்கள்' குறித்து கவலைப் பட்டுக்கொண்டிருக்கத் தேவை இல்லை;

"'சம்யுக்த மராட்டியம்' வேண்டுமென்பது நமது நியாயமான கோரிக்கை; கோரிக்கையை நாம் வெளியிட்டபோது எவ்வளவு ஒற்றுமையுடனும், தன்னடக்கத்துடனும் நடந்துகொண்டோமோ அதே ஒற்றுமையுடனும், தன்னடக்கத்துடனும்—இறுதியாக கோரிக்கை வெற்றி பெறும்வரை இருக்கவேண்டும்;

"ஒரு ஜனநாயக நாட்டில் நிர்வாகத்திலிருப்போர் மக்களின் விருப்பத்தின்படி நடந்தாக வேண்டும்; மேலும், எந்த ஒரு மக்கள் மீதும் எதையும் நிர்ப்பந்தமாகத் திணித்து, வெற்றி பெறுவதென்பது சாத்தியமானதல்ல; சமாதான வழிகளில் தங்கள்கோரிக்கையை ஈடேற்றிக் கொள்ள விரும்புவோர் இதனை மனதில் கொள்ள வேண்டும்; அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சிறு முயற்சியும், இலட்சியத்தையே பாழடித்து விடும் என்பதையும் மறந்துவிடலாகாது"

என்று, சங்கர் ராவ் தேவ், தான் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நவீன முறையில் எஃகினால் உற்பத்தியாகும் இரயில் பெட்டி

அமைப்பு முறை பற்றிய விபரம்

சென்னை, செப். 27—

இந்தியாவிலேயே முதன் முதலாகச் செய்யப்பட்ட இரயில் பெட்டியொன்று பெரம்பூர் இரயில் பெட்டி உற்பத்தித் தொழிற்சாலையிலிருந்து அக்டோபர் 2-ந் தேதியன்று வெளிப்படும். தலைமை அமைச்சர் நேரு, மின்சார விசையொன்றை அழுத்தியவுடனேயே புதிய இரயில் பெட்டி தொழிற்சாலையினுள்ளிருந்து வெளிவரும்.

இப்பெட்டி முழுவதுமே நவீன முறையில் எஃகினால் செய்யப்பட்டிருக்கும்; இப்பெட்டியின் எடை சுமார் 35 டன்களாக இருக்கும்; இப்பொழுது இந்திய இரயில்வேக்களில் ஓடிக்கொண்டிருக்கும் பெட்டியொன்றின் எடை சாதாரணமாக 42 டன்களாக இருந்து வருகின்றன. பெட்டியின் கீழ் வலுவாக எஃகு அச்சு ஒன்று அமைந்திருக்கும்; இந்த அச்சின் மீது பெட்டி முழுவதுமே வார்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுதிருந்துவரும் பெட்டிகளிலோ அச்சின்மீது இரயில் பெட்டி பொருத்திவைக்கப்பட்டிருக்கிறது.

பெரம்பூர் தொழிற்சாலையை அமைப்பதற்கு ரூ 7 கோடியே 30 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலை இதுவேயெனக் கருதப்படுகிறது.

உற்பத்தி தொடங்கும் முதலாவது ஆண்டில், இத்தொழிற்சாலையில், மொத்தம் 25 பெட்டிகளே உற்பத்தியாகும். திட்டப்படி ஆண்டொன்றுக்கு 350 பெட்டிகள் காலவாக்கில் உயர்த்தப்படும்.

இத்தொழிற்சாலையில் 4,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

இத்தொழிற்சாலையில் பணியாற்றுவதற்குரிய பயிற்சியை அளித்து, இத்துறையில் தேவைப்படும் தொழில் நுணுக்க நிபுணர்களைத் தயாரிக்க திட்டமொன்று ஏற்கனவே வகுக்கப்பட்டு, இத்தொழிற்சாலையில் நிறைவேற்றி வைக்கப்பட்டு வருகிறது.

மத்தியப்பிரதேசத்தின் பிற்போக்கு!

சோதிடக் குறிப்புகளைத் தடை செய்யக்கூடாதாம்!

நாகபுரி, செப். 30—

இராசிபலன் அறிவிப்புகள் போன்ற சோதிடக் குறிப்புகள் வெளியிடுவதைத் தடுப்பது குறித்து மத்திய சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக சிலநாட்களுக்கு முன், மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் அறிவித்ததை ஒட்டி, மத்திய சர்க்கார் இப்போது அதுகுறித்து மாநில சர்க்கார்களின் கருத்தைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

"பத்திரிகைகளில் அத்தகு குறிப்புகளும், அறிவிப்புகளும் வெளியிடுவதைத் தடுக்கவேண்டுவது அவசியமில்லை; அவற்றால் ஏதும் தீங்கு விளைவதாகத் தெரியவில்லை என்பதால் அது குறித்து இப்போது ஏதும் நடவடிக்கை மேற்கொள்ளாமல் விட்டுவிடுவதே நலம்,"

என்று தாங்கள் கருதுவதாக மத்திய பிரதேச சர்க்கார் அறிவித்திருக்கின்றனராம்!

கடன் பெற்றவர்களைத் துன்புறுத்தினுல் சட்டப்படி குற்றமாகும்

சந்தேகத்தின் மீது சோதனை இடுவதற்கு போலீஸ் அதிகாரிக்கு அதிகாரம்

'அனுமதி' பெறாமல் லேவாதேவி செய்வோருக்குத் தண்டனை: சென்னை சர்க்கார் மசோதா தரும் விவரம்

சென்னை, செப். 29—

சென்னை மாநிலத்தில், பண லேவாதேவி சம்பந்தமான சட்டங்களை ஒழுங்குபடுத்தக் கட்டுப்பாடு செய்வதற்காகச் சில விதிகளுடன், மசோதா ஒன்றை சர்க்கார் பிரசுரித்துள்ளனர்.

இந்த மசோதாவின் நோக்கங்கள், இலட்சியங்கள் பற்றி சர்க்கார் கூறுவதாவது :—

"பல அடகு கடைக்காரர்கள் திருட்டுச் சொத்துக்களை அடகுக்காகப் பெற்றுக்கொள்வதாகத் தெரிகிறது. அந்தச்சொத்துக்கள் யாரிடமிருந்து கிடைத்தது என்பதை வெளியிட மறுக்கின்றனர். மேலும், அவர்கள், கணக்கு விவரங்களை எழுதி வைத்துக்கொள்ளும் மொழி, இந்த மாநிலத்தில் பேசப்படாத மொழியாக இருக்கிறது. இதனுல் உண்மையைக் கண்டுபிடிப்பதில் கஷ்டமேற்படுகிறது இது சம்பந்தமாக, நகர போலீஸ் சட்டத்தின் பிரிவுகளின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும் நடவடிக்கைகளினுல் திருப்திகரமான விளைவுகள் ஏற்படவில்லை; ஆகவே, பழைய அடகுக் கடைக்காரர்கள் சட்டத்திற்குப் பதிலாக ஒரு புதிய சட்டம் இயற்ற வேண்டியிருக்கிறது.

இனி, ஒவ்வொரு அடகுக் கடைக்காரர்களும் 'லைசென்சு' பெறவேண்டும்; அதற்கு ஒரு குறிப்பிட்ட கட்டணம் செலுத்த வேண்டும்; 'லைசென்சு' வழங்கும் அதிகாரி அரசாங்கத்தாற்குக் கட்டுப் பட்டவர்; ஒவ்வொரு அடகுக் கடைக்காரரும் தமது கடையின் முன்பு அந்த பிரதேசத்தில் வழங்கப்படும் பிரதான மொழியில், 'அடகுக் கடைக்காரர்' என்று எழுதி விளம்பரப்படுத்த வேண்டும்; கணக்கு விபரங்களையும், பட்டியல்களையும் ஆங்கிலத்திலோ, அல்லது சர்க்காரால் நிர்ணயிக்கப் படும் பிரதேச மொழியிலோ வைத்துக்கொள்ள வேண்டும்.

சாமான்கள் மீது அடகுக்குப் பணம் கொடுத்தால் ரூ 25-க்கு மேற்படாத கடன்களுக்கு ஒரு வட்டிக்கு மேல் (ரூ 100-க்கு வருடத்திற்கு ரூ. 12 வட்டி) வாங்கக் கூடாது; ரூ. 25-க்கு மேற்பட்ட கடன்களுக்கு 6½ சதவிகிதத்திற்கு மேல் வட்டி வாங்கக்கூடாது; இதர கடன்களுக்கு ஜாமீனுள்ள கடனுயிருந்தால், வட்டி 100-க்கு 9 சதவிகிதத்திற்கு மேற்படக் கூடாது; ஜாமீன் இல்லாத கடனுகயிருந்தால் 12 சதவிகிதத்திற்கு மேற்படக்கூடாது; சட்டப்படி உள்ள வட்டிக்கு மேல் அதிகமாக எதையும் கேட்கக்கூடாது.

கணக்கில்—கடன் கொடுத்த தேதி, அசல் தொகை, வட்டி விகிதம் ஆகிய விவரங்கள் இருக்க வேண்டும். என்ன தேதியில் எவ்வளவு பணம் வரவு வந்தது என்றும் காட்ட வேண்டும்.

போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு போலீஸ் அதிகாரி லைசென்ஸ் பெற்ற 'லேவாதேவிக்காரர்கள்' கடைக்குள்ளும், லைசென்ஸ் இல்லாமல் 'லேவாதேவி' செய்வதாகச் சந்தேகப்படுபவர்களின் கட்டிடங்களுக்குள்ளும் நுழைந்து கணக்குப் புத்தகங்களைப் பார்வையிடலாம்.

அடகு வைத்த சாமான்களை ஒரு வருடத்திற்குள்ளாகவோ, அல்லது இருதரப்பினரும் ஒப்புக்கொள்ளும் காலத்திற்குள்ளாகவோ மீட்க வேண்டும்; அந்தக் காலம் முடிந்த ஏழு நாட்களுக்குள்ளாகவும் மீட்கலாம்.

அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத சாமான்களை பகிரங்க ஏலத்தின் மூலம் விற்கவேண்டும்.

கணக்கில் காட்டப்பட்டுள்ள தொகைக்குக் குறைவாக லேவாதேவிக்காரர் பணம் கொடுத்திருந்தால், அல்லது, அதிக வட்டி வாங்கினுல் ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 1,500 - வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

அதே குற்றத்திற்காக ஒரு லேவாதேவிக்காரர் இரண்டாவது முறை தண்டிக்கப்பட்டால், கோர்ட்டார், அவருடைய லைசென்சை ரத்து செய்துவிடலாம்.

வட்டியும் முதலுமாகச் சேர்த்து எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டு, இந்தத் தேதிக்குள் அதைச் செலுத்திவிட வேண்டுமென்று முன்னறிவிப்பு கொடுக்காமல், கோர்ட்டில் வழக்கு போடக்கூடாது.

தன்னிடம் அடகுக்காகவோ, விற்பனைக்காகவோ கொடுக்கப்படும் ஒரு சாமான் திருட்டுச் சொத்தென்று லேவாதேவிக்காரர் நம்பினுல், அந்தச்சாமானை கொண்டு வந்தவரை அங்கேயே நிறுத்தி, போலீசாருக்குச் சொல்லியனுப்பி, சாமானையும், நபரையும் போலீசார் வசம் லேவாதேவிக்காரர் ஒப்படைக்கவேண்டும்.

திருட்டுச் சொத்துக்களின் பட்டியல் ஒன்றை போலீசார் அடகுக் கடைக்காரர்களிடம் கொடுப்பார்கள். அந்தப் பட்டியலில் காணப்படும் சாமான் தன்னிடம் வந்தால், அந்தச் சாமானைக் கைப்பற்றி, அடகுக் கடைக்காரர் போலீசாருக்கு 'ரிப்போர்ட்' செய்யவேண்டும்.

கடனை வசூலிப்பதற்காக ஒருவர் கடன்காரரைத் துன்புறுத்தினுல், அல்லது, அப்படி துன்புறுத்துவதற்கு ஒருவர் உடந்தையாக இருந்தால் ஒரு வருடம் சிறை வாசமும், ஆயிரம் ரூபாய் வரை அபராதமும்—அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

லைசென்ஸ் பெறாமலோ, அல்லது, லைசென்ஸ் நிபந்தனைக்கு முரணுகவோ லேவாதேவி செய்பவர்களுக்கு ஆறுமாதம் வரை சிறைவாசமும், ஆயிரம் ரூபாய் வரை அபராதமும் — அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

சென்னை சட்டசபை: கேள்வி நேரம்

'இனும்'களெல்லாம் என்னவாகும் ?

"ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் இனும்களையும் கூட சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமானுல் அதற்கு நஷ்ட ஈடாகக் கொடுப்பதற்குக் கோடிக் கணக்கானரூபாய் தேவைப்படுவதால்தான் சர்க்கார் இதை உடனடியாகச் செய்யமுடியவில்லை," என்று அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்தார்.

"நஷ்டஈட்டைக் கோடிக்கணக்காகக் கொடுப்பதற்குப் பதில் இலட்சக் கணக்காகக் குறைத்து விட்டால் பிரச்சினை சுலபமாகி விடுமே ?" என்று கேட்கப்பட்ட போது, 'இதற்கு அரசியல் சட்டம் குறுக்கிடுகிறது,' என்றுஅமைச்சர் தெரிவித்தார்.

'30 ஆண்டு கடன் பத்திரங்களைக் கொடுத்துவிட்டு ஏன் இனும்களை எடுத்துக் கொள்ளக் கூடாது?" என்று கேட்கப்பட்ட போது, இதுபற்றி சர்க்கார் பரிசீலிப்பதாகவும், ரெவின்யூ போர்டிடமிருந்து அறிக்கையை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

யோசிக்கிறார்களாமே!

"அரிஜன க்ஷேமாலப் பள்ளிகளில் படிக்கும் அரிசனரல்லாத குழந்தைகளுக்குப் பகல் உணவு கொடுத்தால் தீண்டாமை ஒழிவதற்கு வழி ஏற்படாதா?" என்று கேட்கப்பட்டபோது, சர்க்கார் இதுபற்றி யோசித்து வருவதாக அமைச்சர் பரமேசுவரன் தெரிவித்தார்.

தக்க நடவடிக்கை எடுப்பார்களாம்!

"தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள மயிலம் தமிழ் கல்லூரியில் அரிசன மக்கள் சேருவதற்குத் தடையில்லையென நிர்வாகிகள் அறிவித்துள்ளனர் அவ்வாறு யாராவது சேர விரும்பி, சேர்க்கப்படவில்லையானுல், சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்," என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

பயிற்சி பெற்ற நர்சுகளுக்கு வேலையில்லை ?

"சென்னை மாநிலத்தில், பயிற்சி பெற்ற 46 ஆண் 'நர்சு'களும், 104 பெண் 'நர்சு'களும் வேலையின்றி உள்ளனர்; வேலைகள் காலியாவதற்குத் தக்கபடி அவர்களுக்கு வேலை தரப்படும்; 1955—56-ம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தில், 100 'நர்சு'களை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது," என்று, சுகாதார அமைச்சர் கூறினர்.

கவனத்தில் வைத்துக்கொள்ள உத்தரவு

ஆண், பெண் ஊழியர்கள் சம வேலை செய்தால் சம ஊதியம் தரப்பட வேண்டுமெனச் சிபாரிசு செய்து, சர்வதேசத் தொழிலாளர் சம்மேளனம் ஒரு அறிக்கையை சென்னை சர்க்காருக்கு அனுப்பியுள்ளது; தீர்ப்பு கோர்ட்டுகள் இதை மனதில் வைத்துக்கொள்ளும்படியும், தொழிலாளர் கமிஷனரும் இதை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக விவசாய மந்திரி தெரிவித்தார்.

ரூ. 2 இலட்சம் அதிகச் செலவு: தவறுக்கு யார் பொறுப்பு ?

முன்பு குற்ற பரம்பரை சட்டத்தின்கீழ் வந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு கல்விச் சம்பளச் சலுகை அளிப்பது சம்பந்தமான சர்க்கார் உத்தரவில் ஏற்பட்ட வாசகத்தின் தவறினுல், சர்க்காருக்கு சுமார் ரூ. 2 இலட்சம் அதிகச் செலவு நேர்ந்ததென்றும், இதைத் திரும்பிப் பெற முடியாதென கைவிடப்பட்டதென்றும் கல்வி மந்திரி கூறினர்.

படையாச்சி வகுப்பைச் சேர்ந்த பழைய குற்றப்பரம்பரையினருக்கு இலவசமாகக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் வாசகத்தில் 'குற்றப் பரம்பரையினரைச் சேர்ந்த' என்ற வார்த்தை விட்டுப்போய்விட்டதால் குற்றப்பரம்பரையைச் சேர்ந்தவரல்லாத தஞ்சை, தென் ஆர்க்காடு, சேலம், திருச்சி மாவட்ட வன்னியர் குலத்தினர் எல்லோருக்கும் தவறுதலாக இலவசக் கல்விச் சலுகை தரவேண்டிவந்ததென்றும், பின்னர், இத்தவறைத் திருத்தி மற்றொரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டதென்றும் மந்திரி கூறினர்.

உபகாரச் சம்பளம் பெற்ற வன்னிய சமூகத்தினர் யாரையும் அதை திருப்பித் தரும்படி சர்க்கார் கேட்கவில்லையென்றும், எல்லா வகுப்பு ஏழைக் குழந்தைகளுக்கும் மூன்றுவது பாரம்வரை, இலவசக் கல்வி அளிக்கப்படுகிறதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கல்வி உபகாரச் சம்பளத்தால் வன்னிய குல குழந்தைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையாவது:-

"மேற்கு . தஞ்சாவூர்: ரூ. 12,929; தென்னுர்க்காடு ரூ. 88,269; சேலம் ரூ. 75,347; திருச்சிராப்பள்ளி ரூ. 40,740; கிழக்கு தஞ்சாவூர் ரூ 33 840" என்றும் மந்திரி தெரிவித்தார்.

'தவறுக்கு யார் பொறுப்பாளி ?' என்று கேட்கப்பட்டபோது 'இது பற்றி விசாரிக்க வேண்டும்; உத்தரவில் நான் கையெழுத்திட்டதால், நானே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் — அத்தவறைத் திருத்தி இருக்கவேண்டும்,' என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறினர்.

அந்தமான் தீவுகளுக்குச் செல்ல விரும்பும் தம்பதிகளுக்குச் சலுகை

விவசாயம், குடிசைத் தொழில்களில் அனுபவம் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு

புதுடில்லி, செப். 25—

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் குடியேறுவது சம்பந்தமாக இப்போது மேலும் சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

விவசாயம், குடிசைத் தொழில்களில் நேரிடையான அனுபவமும், அறிவும், உடல் நலமும் வாய்ந்த தம்பதிகள் எவர் வேண்டுமானாலும் குடியேறலாம்.

1958-க்குள் மேலும் 4,000 குடும்பத்தினரை அத்தீவுகளில் குடியமைக்க இந்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. சாகுபடிக்கு ஏற்றதாகவுள்ள 20,000 ஏக்கர் நிலம் அவர்களுக்குச் சமமாக விநியோகிக்கப்படும்.

மரம், குடிசைத் தொழில், உலோகத் தொழில்கள் அபிவிருத்திக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமொன்றும் பரிசீலனையில் இருக்கிறது. அங்கு பராடுங் என்ற இடத்தில் எண்ணெய்க் கிணறும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

குடியேற விரும்பும் மேற்குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நபர்கள் சம்பந்தப்பட்ட மாநில சர்க்காரின் பிரதம காரியதரிசிக்கோ, அல்லது அந்தமான் பிரதம கமிஷனருக்கு நேரிடையாகவோ மனுச் செய்ய வேண்டும்.

அடுத்துவரும் ஆண்டுகளில் குடியேற்ற நடவடிக்கைகளை அதிகரிக்க இந்திய சர்க்கார் ஆவல் கொண்டிருப்பதால், மனுக்களை, மாநில சர்க்கார்கள் துரிதமாகக் கவனிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியேறத் தேர்ந்தெடுக்கப்படும் குடும்பங்களுக்கு இலவசப்பிரயாண வசதியும், 10 ஏக்கர் நிலமும் வழங்கப்படும்; அதில் 5 ஏக்கர் நிலம் நெல் சாகுபடிக்கும், மிகுதி 5 ஏக்கர் நிலம் வீடு, தோட்டத்திற்கும் வழங்கப்படும்.

மாடு, விவசாயக் கருவிகள், உரம் முதலியனவும் கிடைக்கும். ரூ. 1,730 கடன் உதவியும், ரூ. 1,050 மானியமும் அளிக்கப்படும்.

எச்சரிக்கிறார் !

"எதிர்காலத்தில் தட்டுப்பாடு வரும் என்று எதிர்பார்த்து, இப்போதே வெளிநாட்டு வர்த்தகர்கள் இங்கு சாமான்களைக் குவிப்பார்களானுல், அவர்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாக நேரிடும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்" என்று பர்மியப் பிரதமர் யூ-னு குறிப்பிட்டிருக்கிறார்.

பிரிட்டன் கவலை

ஆயுதப் போட்டி அபாயம் ஏற்படுமென அச்சம்

பண்டமாற்று அடிப்படை முறையில், ரஷ்யாவிடமிருந்தும், செக்கோஸ்லாவேகியாவிடமிருந்தும் ஆயுதங்களை வாங்குவதற்கு எகிப்து சர்க்கார் உத்தேசித்துள்ளது, தங்களுக்குக் கவலையை உண்டுபண்ணுவதாக அதிகார பூர்வமாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

இவ்வாறு ஆயுதங்களை வாங்குவதால், மத்தியக் கிழக்கில் ஆயுதப் போட்டி ஆபத்து ஏற்படும் என்று பிரிட்டன் கருதுகிறது.

விற்பனை வரியை நிறுத்தி வைக்க உத்தரவு

சென்னை, செப் 30—

மற்ற மாநிலங்களிலிருந்து சென்னை மாநிலத்திற்கு அனுப்பப்படும் சாமான்கள் மீது விற்பனை வரியை நிறுத்தி வைக்குமாறு சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்—அதாவது, 'மற்ற மாநிலங்களிலுள்ள வியாபாரிகளிடமிருந்து விற்பனை வரி வசூல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திருவில்லிப்புத்தூரில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர்

திருவில்லிப்புத்தூர் தி. மு.கழகச் சார்பில் 25—9—55ல், திராவிட நாட்டுப் பிரிவினை வாரப் பொதுக்கூட்டமும், தி மு. கழக 7-வது ஆண்டுவிழாவும் இனிது நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்துகொள்ள துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் 25—9—55 காலை 9-30 மணிக்கு திருவில்லிபுத்தூர் வந்து சேர்ந்தார். இரயில்வே நிலையத்தில் துணைப் பொதுச் செயலாளர் அவர்களை கிளைக் கழகச் செயலாளர் தோழர் குருசாமி அவர்கள் தலைமையில் ஏராளமான கழகத் தோழர்கள் வரவேற்றனர்.

கம்மாபட்டியில்

அன்று மாலை 4 மணிக்கு கம்மாபட்டியில் தி மு. கழக உட்கிளை ஒன்றை தோழர் மா.குருசாமி தலைமையில் துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் துவக்கிவைத்து அரியதோர் சொற்பொழிவாற்றினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

மங்காபுரத்தில்

அன்று மாலை 5-30 மணிக்கு சவுந்திரபாண்டியனுர் வாலிபர் மன்ற அலுவலகத்தின் அருகில், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்து, கழகக் கொள்கையினை விளக்கிச் சிறிது நேரம் பேசினர். கூட்டத்திற்குத் தோழர் சாமசாமி தலைமை வகித்தார்.

பிரிவினை வார விழா

மாலை 7 மணிக்கு, நகர் தி. மு. கழகச் சார்பில் காயர் சதுக்கத்தில் மாபெரும்பொதுக்கூட்டம், தோழர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் குருசாமி, துணைப் பொதுச்செயலாளரை வரவேற்றும், தி. மு கழகம் கடந்த ஆறு ஆண்டு காலத்தில் ஆற்றிய பணியினை எடுத்துக் காட்டியும் சொற்பொழிவாற்றிய பின், தோழர் எஸ். செல்லப்பு, சிறிது நேரம் பேசினர். இறுதியாகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகம் இதுவரை ஆற்றியுள்ள தொண்டினை விளக்கியதுடன், மாநில மாநாட்டில் வரும் பிரதிநிதிகள் யோசனையை ஏற்று, இனி மேலும் நாம் கட்டுப்பாடாகப் பணியாற்ற வேண்டுமென்பதை எடுத்துக் காட்டியும், நேரு சர்க்கார் ஆட்சியில் தென்னுடு புறக்கணிக்கப்பட்டு வருவதையும் விரிவாக விளக்கினர்.

துணைப் பொதுச்செயலாளர் அவர்களுக்கு சுந்தரபாண்டியம், இராமச்சந்திரபுரம், மம்சாபுரம், திருவில்லிப்புத்தூர், கம்மாப்பட்டி ஆகிய கிளைக்கழகங்கள் சார்பிலும், திருவில்லிப்புத்தூர் முற்போக்கு வாசகசாலை சார்பிலும், தோழர் கரிகாலன் சார்பிலும், கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

சென்னை நகர சபைத் தேர்தல்கள் முடிவுற்றன

நிகழ்ச்சிகள்பற்றிய ஒரு படப்பிடிப்பு

சென்னை, செப். 30—

சென்னை நகர சபைத் தேர்தல்கள் முடிவுற்று, முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிட்டன; தேர்தலில் பதிவான வாக்குகள், செல்லாத வாக்குகள், வாக்குரிமையுடையோர் தொகை, தொகுதிகளின் விபரங்கள், வெற்றிபெற்றோர் முதலியனபற்றிய விபரங்கள் தரப்படுகின்றன.

சென்னை நகர சபைக்கு 78 உறுப்பினர்கள் உண்டு; இதில், தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் தொகை 63; இவர்கள் 5 'ஆல்டர்மென்'களைத் தேர்ந்தெடுப்பர். பல நிறுவனங்களும் 10 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பும்.

இந்த 78 பேர்களன்றி, சுகாதார இலாகா தலைமை அதிகாரி, சானிடரி எஞ்சினீயர், நகர அபிவிருத்தி டிரஸ்ட் தலைவர் ஆகிய மூவரையும் தனி உறுப்பினர்களாக சர்க்கார் நியமிக்கும்.

தேர்ந்தெடுக்கப்படும் 63 இடங்களில் 5 இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், 4 இடங்கள் பெண்களுக்கும், 2 இடங்கள் தொழிற் சங்கமுடைய தொழிலாளர்களுக்கும், 2 இடங்கள் தொழிற் சங்கத்திற்குள் வராத தொழிலாளர்களுக்கும் ஒதுக்கப்பட்டவையாகும். ஒதுக்கப்பட்ட 13 இடங்கள்போக 50 இடங்களுக்கும் நகரத்தில் உள்ள 50 வட்டங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

காங்கிரஸ் கட்சி 57 இடங்களுக்குப் போட்டியிட்டு 38 இடங்களைப் பிடித்துள்ளது; இவற்றில் 7 இடங்களில் போட்டியின்றி வெற்றி கிடைத்தது; ஒரு காங்கிரசார் ஜாமீன் பறிகொடுத்தார்.

சோஷலிஸ்டு தொழிலாளர் முன்னணி ஒன்பது இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களைப் பிடித்துள்ளது.

ம. சோ. கட்சியினர் 4 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களைப் பிடித்திருக்கின்றனர்.

இரண்டு கம்யூனிஸ்டுகள் போட்டியிட்டுத் தோல்வி கண்டனர்.

மொத்தமாக 100 சுயேச்சைகள் போட்டியிட்டு 19 இடங்களை மட்டுமே பெற்றிருக்கின்றனர்.

பொதுவில் வாக்குப் பதிவு நாம் ஏற்கனவே வெளியிட்டிருந்த விபரப்படி மிக மந்தமாகவே இருந்தது. சுமார் 30 சதவிகிதத்தினர் மட்டுமே வாக்குப் பதிவு செய்திருக்கின்றனர்.

ஏற்கனவே உறுப்பினர்களாயிருந்தோரில் ஒன்பது பேர்கள் பதவி பறிகொடுத்திருக்கின்றனர்.

ஒரு காங்கிரசார் உட்பட 31 பேர்கள், தங்கள் ஜாமீன் தொகை இழந்தனர்.

வாக்குப் பதிவும், எண்ணலும் 10 நாட்களை விழுங்கின.

50 வட்டங்களுக்கும் மொத்தமான வாக்காளர் எண்ணிக்கை 8,65,515 ஆகும்; ஆறு வட்டங்களில் வாக்குப் பதிவு இல்லை; எனவே, இதர 44 வட்டங்களிலும் உள்ள மொத்த வாக்காளர் எண்ணிக்கை 7,85,836 ஆகும். இதில் வாக்களித்தவர் எண்ணிக்கை 2,99,900 மட்டும்தான்; இது ஏறத்தாழ மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 38.2 சதவிகிதம் மட்டுமே!

இந்தத் தேர்தலை நடத்துவதற்காகத் தேவைப்பட்டோரின் எண்ணிக்கை—வேலையாட்கள் நீங்கலாக—4,069 ஆகும்.

வாக்குகளை எண்ணுவதற்காக 144 அதிகாரிகளும், 34 தேர்தல் சாவடி அதிகாரிகளும் தேவைப்பட்டனர்.

வாக்குகளை எண்ணுவதற்கு மொத்தம் 51 மணி நேரம் பிடித்தது.

தேர்ந்தெடுக்கப்பட்டோர்

1. புது வண்ணாரப்பேட்டை:
பி. தங்கராசு (காங்)
2 இராயபுரம்:
பார்னஸ் பரமானந்தம் (சுயே)
3 சிங்காரத் தோட்டம்:
கே. கணேசன் (சுயே)
4. சஞ்சீவிராயன்பேட்டை:
வி. சுந்தரமூர்த்தி (காங்)
5. கொருக்குப்பேட்டை:
செல்லப்பிள்ளை (சுயே)
6. வியாசர்பாடி:
என். தாமோதரன் (காங்)
7 பேசின்பிரிட்ஜ்:
கே. ராம்தாஸ் (காங்)
8. பெத்துநாய்க்கன்பேட்டை:
ஆறுமுகம் (காங்)
9 ஏழுகிணறு:
வி முனுசாமி (சுயே)
10 அம்மன்கோயில்:
ஜி இராஜமன்னர் (பி-சோ)
12 ஹார்பர்:
டி. அஜீசுதீன் (காங்)
13. கச்சாலீஸ்வரர்:
வி. ஆர். இராமநாதய்யர் (காங்)
14. கொத்தவால்சாவடி:
டாக்டர் அழகசிங்கரி (காங்)
15. சௌகார்பேட்டை:
டாக்டர் சாமி (காங்)
(போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார்)
16. தண்ணீர்தொட்டி:
எம் கே. நாகேந்திரன் (சுயே)
21. அயனாவரம்:
பி. இ. பக்தவத்சலம் (சுயே)
22. கீழ்ப்பாக்கம்:
செல்லம்மைய நாயுடு (காங்)
23. புரசைவாக்கம்:
டி. எஸ். கோவிந்தசாமி (காங்)
24. குயப்பேட்டை:
எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை (சோஷ)
25. வேப்பேரி:
எம். ஆர். அப்பாதுரை (காங்)
26. பெரியமெட்டு:
சுந்தரராஜ் (சுயே)
27. எடப்பாளையம்:
எம். பார்த்தசாரதி (சுயே)
28. பார்க் டவுன்:
பி. இ. இராகவ செட்டி (காங்)
29. நேப்பியர் பார்க்:
அ. பொ. அரசு (சுயே)
30. சிந்தாதிரிப்பேட்டை:
சி. வி. திருவேங்கடம் (காங்)
31. கோமளீஸ்வரன்பேட்டை:
சம்பத்து (காங்)
32. எழும்பூர்:
டாக்டர். சந்தோஷம் (காங்)
35. கோடம்பாக்கம்:
கே. விநாயகம் (சுயே)
36. தியாகராய நகர் [வடக்கு]:
எஸ். கிருஷ்ணமூர்த்தி (சுயே)
37. இராயப்பேட்டை:
கே. கமலக்கண்ணன் (காங்)
38. புதுப்பாக்கம்:
அகமத் மொஹைதீன் சாகிப் பீஜபுரி: போட்டியில்லை (காங்)
39. திருவட்டீஸ்வரன்பேட்டை:
தௌலத்ராம் (காங்)
41. திருவல்லிக்கேணி:
என். இ இராகுநாதன் போட்டியில்லை (காங்)
42. ஜாம்பஜார்:
எம். எம். எம் ஹபாத் (சுயே)
43. மீர்சாகிப்பேட்டை:
டாக்டர். கரீம் (சுயே)
44. மயிலாப்பூர் [வடக்கு]:
பி. எஸ். செட்டியார் (சுயே)
46. தேனும்பேட்டை:
டி. எம். சண்முகம் (சுயே)
47 தியாகராய நகர் [தெற்கு]:
கே. எம். சுப்பிரமணியம் (காங்)
48. சைதாப்பேட்டை:
எம். கன்னியப்பன் (காங்)
49. கிண்டி:
நரசிம்மராவ் (காங்)
50. அடையார்:
ஏ. ஜி. ஆதிமூலம் (காங்)

★

இரட்டைத் தொகுதிகள்

11. முத்தியாலுப்பேட்டை:
கே. என். சீனிவாசன் (காங்)
சரஸ்வதி பாண்டுரங்கம் (காங்)
(போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டனர்)
17. சூளை:
எம். வரதராஜுலு (சுயே)
திருமதி தனபாய் (சுயே)
18. புளியந்தோப்பு:
எம் இ. கோவிந்தராசன் (சுயே)
ஏ. சித்திரைவேலு (சுயே)
19. பெரம்பூர் பாரக்ஸ்:
எஸ். பக்கிரிசாமி (தொ. மு.)
கே. எம். சாமுண்டீசுவரன் (தொ. மு.)
20. செம்பியம்:
டி. ஆண்டியப்பன் (காங்)
ஆர். முனுசாமி (காங்)
33. ஆயிரம்விளக்கு:
ஜி. கிருஷ்ணன் (காங்)
கே. மாணிக்கவாசகம் (காங்)
34. நுங்கம்பாக்கம்:
டி. பார்த்தசாரதி (காங்)
கே. எம். நாதமுனி (காங்)
40. சேப்பாக்கம்:
கே. எஸ் ஏகாம்பரம் (காங்)
திருமதி டி.எல் திரிபுரசுந்தரி (காங்)
45. மயிலாப்பூர் [தெற்கு]
திருமதி டி. என். அனந்தநாயகி (காங்)
சி. ஆர். இராமசாமி (காங்)

★

தொழிலாளர் தொகுதிகள்:

இரயில்வே தொழிற்சங்கத் தொழிலாளர் தொகுதி:
எஸ். ஏ. மகாலிங்கம் (சுயே)
துணிஆலைத் தொழிற்சங்கத் தொழிலாளர் தொகுதி;
சி. கே. நாராயணன் (சோ.தொ மு.)
யூனியன் அல்லாதார் தொழிலாளர் தொகுதி [தெற்கு]:
பி. என். லட்சுமிபதி (காங்)
யூனியன் அல்லாதார் தொழிலாளர் தொகுதி [வடக்கு]:
சி. கோவிந்தராசலு (காங்)

கல்லக்குடி.........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாற்றுவது சம்பந்தமாக, சென்னை சர்க்காரை, மத்திய அரசாங்கம் ஆலோசனை கேட்டதா? அப்படியானால், சென்னை அரசாங்கம் என்ன யோசனை கூறியது?"

ப:- சென்னை அரசாங்கத்திடம் யோசனை கேட்கப்படவுமில்லை; அது பற்றி சென்னை சர்க்கார் எவ்விதச் சிபாரிசும் செய்யவுமில்லை."

கே:- "டால்மியாபுரம் பெயரை மாற்றுவதற்கு மத்திய அரசாங்கம் முன்வந்தபோது, சென்னை அரசாங்கம், அதை ஏற்கவில்லை என்பது உண்மையா?

ப:- "அது சரியல்ல; 'பெயர் மாற்றம் செய்யும்படி முன்பு நாம் கூறிய சிபாரிசை மத்திய சர்க்கார் ஏற்கவில்லை,' என்ற தோரணையில் உறுப்பினர்கள் கூறினர்; இப்போது, அதை மாற்றிக் கேட்கின்றனர்; இந்த யூகங்களுக்கெல்லாம் ஆதாரமே கிடையாது."

கே:- "ரூ. 2 கோடியை மோசம் செய்ததாகக் கைது செய்யப்பட்டுள்ள டால்மியாவின் பெயர்தானா, 'டால்மியாபுரம்' என்று, வைக்கப்பட்டது?"

ப:- பல டால்மியாக்கள் உள்ளனர் என்பதை உறுப்பினருக்குக் கூற விரும்புகிறேன்."

அ. பொன்னம்பலனார்

'நம் நாடு' நிர்வாகப் பொறுப்பிலிருந்து **30-9-55** வெள்ளிக்கிழமையோடு விலகிக்கொண்டேன்.

'நம் நாடு' சம்பந்தப்பட்ட வரவு-செலவு கணக்குகள், இருப்புத் தொகைகள், பாங்கி இருப்பு ஆகியவைகளுடன்—தூத்துக்குடி சதிவழக்கு நிதி, கல்லக்குடி உயிர்நீத்தார் உதவி நிதி ஆகிய வரவு-செலவு கணக்குகளும் நீக்கி, இருப்புத் தொகைகளும், மாநில மாநாட்டு நிதிவசூல் தொகைகளும்—ஆகிய எல்லாவற்றையும், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறேன்.

'நம் நாடு' நிர்வாகப் பொறுப்பில் என்னுடன் தொடர்பு கொண்டு ஒத்துழைத்த அண்ணா அவர்கட்கும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கும், மற்றும் எல்லாத் தோழர்கட்கும் நன்றி கூறிக்கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

அன்புள்ள,
அ. பொன்னம்பலனார்.

முகவரி:—
அ. பொன்னம்பலனார்,
பூவாளூர்(அஞ்சல்) லால்குடி,
(திருச்சி மாவட்டம்)

★

நன்றி நவிலல்

"தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தமது சொந்த ஊராகிய பூவாளூருக்குச் சென்று, தமது வயதான தந்தையாரின் அருகில் இருந்து அவரது நலனைக் கவனிக்க பார்க்கவேண்டிய இன்றியமையாத கடமையின் காரணமாக, 'நம் நாடு' பொறுப்பாளர் பொறுப்பிலிருந்து 1—10—55-ம் நாளிலிருந்து விலகிக்கொள்கிறார்கள்.

அவர் விலகிக் கொள்வது நமக்கெல்லாம் மிக்க மன வருத்தத்தைத் தருவதாகும்; அவர் 'நம் நாடு' பொறுப்பாளராக இருந்து, சென்ற இரண்டு ஆண்டுக் காலத்திற்கு மேலாக ஆற்றிய அருந்தொண்டுகள் பலப்பல; அவருக்குச் செய்ந்நன்றியறிய நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்; அவருக்கு மனமார்ந்த நன்றியும், வாழ்த்துக்களும் உரியவாக.

அவர், தம் சொந்தஊரிலிருந்து கொண்டு, இயலும்போது கழகத் தொண்டுகள் ஆற்றி வருவார்கள்; ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அவரது பூவாளூர் முகவரிக்கு எழுதி, அவர்களை அவ்வப்போது பயன்படுத்திக் கொள்ளவேண்டுகிறேன்."

இரா. நெடுஞ்செழியன்
ஆசிரியர்: 'நம் நாடு'

சென்னை 35-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

2—10—55 காலை 9 மணிக்கு, சென்னை 35-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும் அதுபோது, கழக ஆக்க வேலை குறித்தும், பொதுக்கூட்டம் நடத்துவது பற்றியும் ஆலோசனை செய்யப்படும்.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

2—10—55 காலை 8 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

இந்தித் திணிப்பு

சட்டசபையில் எதிர்ப்பு

சென்னை, செப். 29—

சென்னை மேல் (சட்ட)சபையில் நேற்று நடைபெற்றதைப் போலவே, இன்று, சென்னை சட்டசபையிலும் அலுவல் மொழிக் குழுவினர் தயாரித்துள்ள கேள்விப் பட்டியல் குறித்து விவாதம் நடைபெற்றிருக்கிறது.

நிதி மந்திரி சுப்பிரமணியம், சர்க்காரின் கொள்கையை விளக்கியிருக்கிறார்.

காங்கிரஸ் உறுப்பினர்கள், மற்றும் பல எதிர்க்கட்சியினரெல்லாம், இந்தியை இந்தியப் பேரரசின் அலுவல் மொழியாக்க எடுத்துக்கொள்ளும் அவசர அவசரமான முடிவுகளை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கின்றனர்.

நிதிமந்திரி தொடக்கத்தில் பேசுகையில் சொன்னார்:—

"சிக்கல் குறித்துப் பேசும்போது, அடிப்படையான முக்கியமான உண்மை ஒன்றை மனதில் கொள்ள வேண்டும்;

"நாம், இந்தியா முழுமைக்குமான ஒரு மொழி பற்றிய சிக்கல் குறித்துப் பேசுகிறோம் என்பதையும் நமக்கெல்லாம் ஒரு அரசியல் சட்டம் இருக்கிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது; எனவே, இந்த சிக்கல் பற்றி விவாதிப்பதற்கும், தனி நாடு அமைப்பது போன்ற விஷயங்களுக்கும் தொடர்பே இல்லை; எனவே, 'தமிழ் நாடு தனி நாடாக வேண்டும்,' என்பது போன்ற சிக்கல்களை இந்த விவாதத்தின்போது எழுப்ப வேண்டாம்.

தோழர் அரங்கசாமி அவர்கள் பேசுகையில், தமிழகத்தில் தோன்றியுள்ள இந்தி எதிர்ப்பு இயக்கத்தைச் சுட்டிக்காட்டி, மாநிலத்தின் நிர்வாகம் முழுவதும் உயர் நீதிமன்றம் வரையில் தமிழ் மொழியிலேயே நடைபெறவேண்டும்; பள்ளிகளில் இந்தி கட்டாயம் என்ற பேச்சே கூடாது; 'இஷ்டப் பாடமாக' வேண்டுமானால் இந்தி கற்பிக்கப்படலாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தோழர் முத்தையா அவர்கள் பேசுகையில், "தமிழ் மொழி மாநில ஆட்சி மொழியாக வேண்டும்; சட்ட சபையிலும், மக்கள் சபையிலும் வட்டார மொழிகளே பேசப்படலாம்; ஏக காலத்தில் பிற மொழிகளில் பேச்சுக்களை மொழி பெயர்க்க இந்தக் காலத்தில் வசதி உண்டு என்பதால் அவ்வாறே செய்யலாம்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தோழர் எம். பி. சுப்பிரமணியம் பேசுகையில், "இந்தி மொழியை இந்திய அலுவல் மொழியாகப் புகுத்துவதை எதிர்க்கிறேன்; இன்னும் வரப்போகிற காலத்திற்கெல்லாம் ஆங்கிலம் நமக்குத் தேவையான மொழியாகும்; இந்தி அலுவல் மொழியாக வேண்டுமென்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது; இந்தியாவின் அலுவல் மொழிகளாக ஒன்றுக்கு மேற்பட்ட பல மொழிகளையும் வைத்துக்கொள்வதே ஜனநாயக முறையாகும்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பல உறுப்பினர்கள், "இந்தி அலுவல் மொழியாக வருவதற்கு 15 ஆண்டுகள் போதுமானதல்ல—குறைந்தது 30 ஆண்டுகளேனும் வேண்டும்," என்று வற்புறுத்தியிருக்கின்றனர். பலர், "அகில இந்தியப் பதவிகளுக்கான பரீட்சைகளில் இந்தி மொழிக்குப் பதில் வட்டார மொழிகளே இருக்க வேண்டும்," என்றும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.